த. நா.ச.பே. எண்: 01 | நாள் : 01.02.2024

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### செய்திக் குறிப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் 12.2.2024 ஆம் நாள், திங்கட்கிழமை, காலை 10.00 மணிக்கு, சென்னை – 600 009, தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடும். அவ்வமயம் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்த உள்ளார்கள்.

2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாள், திங்கட்கிழமை, காலை 10.00 மணிக்கு பேரவைக்கு அளிக்கப்படும்.

மேலும், 2024–2025–ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 20 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை அன்றும்,

2023–2024–ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி), 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 21 ஆம் நாள், புதன்கிழமை அன்றும் பேரவைக்கு அளிக்கப்பெறும்.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009,
நாள்: 1.2.2024

முனைவர் கி. சீனிவாசன்
முதன்மைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in